மூன்றாம் திருப்புத் தேர்வு - 2023

12-ம் வகுப்பு கணக்குப்பதிவியல்

மதிப்பெண்கள்: 90 காலம் : 3.00 மணி

பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க**

சரியான விடையை தேர்வு செய்து குறியீட்டுடன் விடையை எழுதவும். **20X 1=20**

1) **கீழ்கண்ட செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு தொடர்பான எந்த விவரம் மொத்தக் கடனீந்தோர்கணக்கிற்கு மாற்றப்படுகிறது?**

(அ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டின் தொடக்க இருப்பு

(ஆ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டின் இறுதி இருப்பு

(இ) அவ்வாண்டில் ஏற்கப்பட்ட செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு

(ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக்கு ரொக்கம் செலுத்தியது

2) **தொடக்க முதல்ரூ. 10,000, அவ்வாண்டின் எடுப்புகள்ரூ. 6,000, கொண்டுவந்த கூடுதல் முதல் ரூ. 3,000 மற்றும் இறுதி முதல் 9,000 எனில் சரிகட்டப்பட்ட இறுதிமுதல் காணவும்.**

(அ)ரூ. 9,000 (ஆ)ரூ. 12,000 (இ)ரூ. 21,000 (ஈ)ரூ. 2,000

3) **நடப்பாண்டில் பெறவேண்டிய சந்தா இன்னும் பெறாதது**

(அ) ஒரு சொத்து (ஆ) ஒரு பொறுப்பு

(இ) ஒரு செலவு (ஈ) தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று

4) **2018 ஆம் ஆண்டில் சந்தா பெற்றது ரூ.50,000. இதில் 2017 ஆம் ஆண்டிற்குரிய சந்தா ரூ.5,000 மற்றும் 2019 ஆம் ஆண்டிற்குரிய சந்தா ரூ.7,000 உள்ளடங்கியுள்ளது. எனில் 2018-ம் ஆண்டின் சந்தா....**

(அ)ரூ. 50,000 (ஆ)ரூ. 62,000 (இ)ரூ. 7,000 (ஈ)ரூ. 38,000

5) **கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாத நிலையில் நிறுவனத்தின் இலாபம்கூட்டாளிகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுவது**

(அ) சமமான விகிதத்தில் (ஆ) முதல் விகிதத்தில்

(இ) இரண்டும் (அ) மற்றும் (ஆ) (ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

6) **பின்வருவனவற்றில் எது சரியற்ற இணை?**

(அ) எடுப்புகள் மீது வட்டி - முதல் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்

(ஆ) முதல் மீது வட்டி - முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்

(இ) கடன்மீது வட்டி - முதல் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்

(ஈ) இலாபப் பகிர்வு - முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்

7) **கீழ் வருவனவற்றில் எது சரியானது?**

(அ) உயர் இலாபம் = மொத்த இலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை

(ஆ) உயர் இலாபம் = கூட்டு இலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை

(இ) உயர் இலாபம் = சராசரி இலாபம் - சாதாரண இலாபம்

(ஈ) உயர் இலாபம் = சராசரி இலாபம் × கொள்முதல் ஆண்டுகள்

8) **2017-ல் கணக்கேட்டின்படி இலாபம்ரூ. 35,000: இலாபத்தில் சேர்ந்துள்ள திரும்பத் திரும்பநிகழா வருமானம்ரூ. 2,000 மற்றும் 2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட அசாதாரண நட்டம்ரூ.1,000 எனில் சரிக்கட்டப்பட்ட இலாபம்**

(அ)ரூ. 36,000 (ஆ)ரூ. 35,000 (இ)ரூ. 38,000 (ஈ) ரூ. 34,000

9) **கூட்டாளியின் பழைய இலாபப்பகிர்வை விட புதிய இலாபப் பகிர்வு அதிகமாக இருந்தால்அவ்வேறுபாடு அழைக்கப்படுவது**

(அ) முதல் விகிதம் (ஆ) தியாக விகிதம்

(இ) ஆதாய விகிதம் (ஈ) இவற்றுள் எதுவுமில்லை



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

10) **கூட்டாளி சேர்ப்பு தொடர்பாக பின்வரும் கூற்றுகளில் எது உண்மையானதல்ல?**
(அ) பொதுவாக கூட்டாளிகளின் பரஸ்பர உரிமைகள் மாறும்
(ஆ) முந்தைய ஆண்டுகளின் இலாபம் மற்றும் நட்டங்கள் பழைய கூட்டாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்
(இ) கூட்டாண்மை நிறுவனமானது புதிய ஒப்பந்தத்தின் கீழ் மறு கட்டமைக்கப்படும்
(ஈ) ஏற்கனவே உள்ள ஒப்பந்தமானது முடிவுக்கு கொண்டு வரப்படாது

11) **கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து கூட்டாளி விலகலின்போது பகிர்ந்து தரா இலாபங்கள்மற்றும் நட்டங்கள் கூட்டாளிகளுக்கு இந்த அடிப்படையில் பகிரப்படுகிறது.**
(அ) புதிய இலாபப் பகிர்வு விகிதம் (ஆ) பழைய இலாபப் பகிர்வு விகிதம்
(இ) ஆதாய விகிதம் (ஈ) தியாக விகிதம

12) **X , Y மற்றும் Z என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை சமமாகப் பகிர்ந்து வந்தனர்.2019, ஏப்ரல் 1 அன்று X இறந்து விட்டார். 2018 இல் இலாபம்ரூ. 36,000 என்றஅடிப்படையில் 2019 ஆம் ஆண்டுக்குரிய இலாபத்தில் X ன் பங்கினைக் கண்டறியவும்.**
(அ)ரூ. 1,000 (ஆ)ரூ. 3,000 (இ)ரூ. 12,000 (ஈ)ரூ. 36,000

13) **பின்வரும் வாக்கியங்களில் எது தவறானது?**
(அ) வெளியிடப்பட்ட பங்குமுதல் அங்கீகரிக்கப்பட்ட பங்குமுதலை விட ஒருபோதும் அதிகமாக இருக்க கூடாது.
(ஆ) பங்குகள் குறை ஒப்பமாக இருக்கும் நிலையில் வெளியிடப்பட்ட பங்குமுதல், ஒப்பிய பங்குமுதலை விட குறைவாக இருக்கும்.
(இ) காப்பு முதல் நிறுமத்தை கலைக்கும்போது செலுத்துமாறு அழைப்பு விடுக்கப்படுகிறது.
(ஈ) செலுத்தப்பட்ட பங்குமுதல், அழைக்கப்பட்ட பங்கு முதலின் ஒரு பகுதி ஆகும்.

14) **ரூ 5 செலுத்தப்பட்ட,ரூ. 10 மதிப்புள்ள பங்கு ஒறுப்பிழப்பு செய்யப்பட்டது எனில், அதன்குறைந்த அளவு மறுவெளியீட்டு விலை**
(அ) பங்கொன்று ரூ. 10 (ஆ) பங்கொன்று ரூ. 8(இ) பங்கொன்று ரூ. 5 (ஈ) பங்கொன்று ரூ. 2

15) **நிதி என்னும் சொல் குறிப்பிடுவது**
(அ) நடப்புப் பொறுப்புகள் (ஆ) நடைமுறை முதல்
(இ) நிலைச் சொத்துகள் (ஈ) நீண்டகாலச் சொத்துகள்

16) **ஒரு வரையறு நிறுமத்தின் விற்பனைரூ. 1,00,000லிருந்துரூ. 1,50,000க்கு அதிகரித்துள்ளது.இது ஒப்பீட்டு வருமான அறிக்கையில் எவ்வாறு தோன்றுகிறது?**
(அ) + 20% (ஆ) + 50% (இ) -50% (ஈ) - 20%

17) **ஒரு நிறுமத்தின் நீர்மைத்தன்மையை சோதிக்க கீழ்க்கண்ட எந்த விகிதங்கள்பயன்படுகிறது?**
(1)நிகர இலாப விகிதம் (2) விரைவு விகிதம்
(3) புற அக பொறுப்புகள் விகிதம் (4) நடப்பு விகிதம்
**கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டை பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**
(அ) 1 மற்றும் 2 (ஆ) 1 மற்றும் 4 (இ) 2 மற்றும் 3 (ஈ) 2 மற்றும் 4

18) **பின்வருவனவற்றில் சரியாகப் பொருந்தாதது எது?**
(அ) நீர்மை விகிதம் - விகிதாச்சாரம்
(ஆ) மொத்த இலாப விகிதம் - மடங்கு
(இ) நிலைச் சொத்துகள் சுழற்சி விகிதம் - மடங்கு
(ஈ) புற அக பொறுப்புகள் விகிதம் - விகிதாச்சாரம்

19) **எதிர்ப்பதிவு சான்றவாணம் எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது?**
(அ) தலைமைப் பதிவு (ஆ) அலுவலக பயன்பாட்டிற்காக வங்கியில் இருந்து எடுத்த ரொக்கம்
(இ) அறிக்கைகள் (ஈ) சொத்துகள் கடனுக்கு வாங்கியது

20) **அறைகலன் கடனுக்கு வாங்கியதை Tally- ல் எந்த வகை சான்றாவணத்தில் பதியப்படும்?**
(அ) பெறுதல்கள் சான்றாவணம் (ஆ) உரிய குறிப்பேடு சான்றாவணம்
(இ) கொள்முதல் சான்றாவணம் (ஈ) செலுத்தல்கள் சான்றாவணம்



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

## பகுதி -II

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்** (வினா எண் 30 கட்டாயம்) **7X2=14**

21) பின்வரும் விவரங்களிலிருந்து பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு தயாரிக்கவும் மற்றும் கடனாளிகளிடமிருந்து பெற்ற மாற்றுச்சீட்டுத் தொகையினை கணக்கிடவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| ஆண்டு தொடக்கத்தில் பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 1,40,000 |
| ஆண்டு முடிவில் பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 2,00,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக்காக ரொக்கம் பெற்றது | 3,90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 30,000 |

22) இலாப நோக்கற்ற அமைப்பின் வருவாயினச் செலவுகளுக்கு எ.கா. 4 தருக.

23) மணி என்ற கூட்டாளி 2018, செப்டம்பர் 1 அன்று ரூ.30,000 எடுத்துக் கொண்டார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 6% என கணக்கிடப்பட வேண்டும். 2018, டிசம்பர் 31 அன்று எடுப்புகள் மீது வட்டி கணக்கிட்டு அதற்குரிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

24) வாங்கப்பட்ட நற்பெயர் என்றால் என்ன?

25) கோவிந்த் மற்றும் கோபால் இருவரும் கூட்டாளிகள். அவர்கள் 3:2 என்ற விகிதத்தில் இலாப நட்டங்களை பகிர்ந்து வந்தனர். ஹேமா என்பவர் 1/5 இலாப விகிதத்தில் கூட்டாண்மையில் சேருகிறார்.புதிய இலாப விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடவும்.

26) தீனா, சூர்யா மற்றும் ஜானகி என்ற கூட்டாளிகள் 5:3:2 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். 31.3.2018 அன்று தீனா கூட்டாண்மையை விட்டு விலகினார். அவருடைய விலகலின் போது நிறுவனத்தின் கணக்கேடுகள் ரூ.1,00,000 காப்பு நிதியினைக் காட்டியது. காப்பு நிதியினை மாற்றுவதற்கு தேவையான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

27) முத்து வரையறை நிறுமம் பங்கு ஒன்று ரூ.10 வீதம் 50,000 பங்குகளை பின்வருமாறு செலுத்தும் விண்ணப்பம் வெளியிட்டது.விண்ணப்பத்தின் மீது ரூ.2, ஒதுக்கீட்டின் மீது ரூ.4, முதல் மற்றும் இறுதி அழைப்பின் மீது ரூ.4,. 1000 பங்குகள் வைத்துள்ள ஒருவர் அழைப்புத் தொகையை செலுத்தவில்லை. இதைத்தவிர, ஏனைய அனைத்து தொகைகளும் பெறப்பட்டன. அழைப்பு நிலுவை கணக்கினைப் பயன்படுத்தி அழைப்புக்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

28) நடைமுறை முதல் என்றால் என்ன?

29) Tally ERP- 9 ல் முன்பே வரையறுக்கப்பட்ட பேரேடுகள் யாவை?

30) கீழ்க்கண்ட தகவல்களிலிருந்து நடப்பு விகிதத்தை கணக்கிடவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| சரக்கிருப்பு | 1,30,000 | நிலைச் சொத்துகள் | 6,00,000 |
| கடனாளிகள் | 2,20,000 | கடனீந்தோர் | 1,20,000 |
| ரொக்கம் | 10,000 | நீண்டகால பொறுப்புகள் | 3,00,000 |

## பகுதி - III

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.** (வினா எண் 40 கட்டாயம்) **7X3=21**

31) 2018, ஏப்ரல் 1 அன்று சுபா தன்னுடைய தொழிலை ரூ.1,00,000 முதலுடன் தொடங்கினார். அவர் முறையான கணக்கேடுகளை பராமரிக்கவில்லை. 2019, மார்ச் 31 அன்று அவருடைய ஏடுகளிலிருந்து பெறப்பட்ட விவரங்கள் பின்வருமாறு:

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| வங்கி மேல்வரைப்பற்று | 50,000 | சரக்கிருப்பு | 1,60,000 |
| கடனாளிகள் | 1,80,000 | கடனீந்தோர் | 90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 70,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 2,40,000 |
| இயந்திரம் | 3,30,000 | கைரொக்கம் | 60,000 |

அவ்வாண்டில் அவர் தன்னுடைய சொந்த பயனுக்காக ரூ.30,000 எடுத்துக் கொண்டார். அவ்வாண்டில் அவர் கொண்டுவந்த கூடுதல் முதல் ரூ.40,000. அவருடைய இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

32) ஈரோடு விளையாட்டு மன்றத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளில் பின்வருவன எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று தொடர் விளையாட்டுப் போட்டி நிதி | 1,00,000 |
| 2018, ஏப்ரல் 1 தொடர் விளையாட்டுப் போட்டி நிதி முதலீடு | 1,00,000 |
| தொடர் விளையாட்டுப் போட்டி நிதி முதலீடு மீதான வட்டி பெற்றது | 10,000 |
| தொடர் விளையாட்டுப் போட்டி நிதிக்கான நன்கொடை | 20,000 |
| தொடர் விளையாட்டுப் போட்டி செலவுகள் | 70,000 |

33) நிலைமுதல் முறைக்கும் மாறுபடும் முதல் முறைக்கும் உள்ள வேறபாடுகள் 3 தருக.

34) பின்வரும் தகவல்களிலிருந்து மூலதனமாக்கல் முறையில் நற்பெயரின் மதிப்பை காணவும்.

1. சராசரி இலாபம் ரூ.20,000
2. சாதாரண இலாப விகிதம் 10%
3. பயன்படுத்தப்பட்ட முதல் ரூ.1,50,000

35) சாம் மற்றும் ஜோஸ் என்னும் கூட்டாளிகள் 3:2 என்னும் விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். 2018, ஏப்ரல் 1 அன்று ஜோயல் என்பவரை கூட்டாளியாக சேர்த்துக்கொண்டனர். ஜோயல் கூட்டாண்மையில் சேர்ந்த அன்று நிறுவன ஏடுகளில் நற்பெயர் ரூ.30,000 ஆக இருந்தது. மாறுபடும் முதல் முறையில் கணக்குகள் பராமரிக்கப்படுவதாக கருதி கூட்டாளிகளின் பின்வரும் முடிவுகளின்படி குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

1. ஏட்டில் உள்ள நற்பெயர் தொகை முழுவதையும் போக்கெழுதுவது
2. ஏட்டில் உள்ள நற்பெயரில் ரூ.20,000 போக்கெழுதுவது

36) கவின், மதன் மற்றும் ரஞ்சித் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை முறையே 4:3:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2018, டிசம்பர் 31 அன்று கவின் கூட்டாண்மையை விட்டு விலகுகிறார். விலகலுக்குப்பின் தேவையான சரிக்கட்டுதல்களைச் செய்த பிறகு அவருடைய முதல் கணக்கு ரூ.1,50,000 வரவிருப்பைக் காட்டியது. பின்வரும் நிலைகளில் பதிய வேண்டிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

1. விலகும் கூட்டாளிக்குச் செலுத்த வேண்டிய தொகை உடனடியாக காசோலை மூலம் செலுத்தப்பட்டது.
2. விலகும் கூட்டாளிக்குச் செலுத்த வேண்டிய தொகை உடனடியாக செலுத்தப்படவில்லை.
3. ரூ.1,00,000 உடனடியாக காசோலை மூலம் செலுத்தப்பட்டது. மீதிஇன்னும் செலுத்தப்படவில்லை.

37) நிவேதா வரையறு நிறுமம் ரூ.10 மதிப்பிலான 1,000 நேர்மைப் பங்குகளை அழைப்புத் தொகை பங்கு ஒன்றிற்கு ரூ.3 வீதம் செலுத்தவில்லை என ஒறுப்பிழப்பு செய்தது. இதில், பங்கு ஒன்றிற்கு ரூ.7 வீதம் 900 பங்குகள் மறுவெளியீடு செய்யப்பட்டன. ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

38) ஒப்பீட்டு அறிக்கை தயாரிப்பில் உள்ள படிநிலைகளை விளக்கவும்.

39) கணினிமயக் கணக்கியல் முறையின் பயன்பாடுகளில் ஏதேனும் 3 விளக்கவும்.

40) கார்வேம்பு நிறுமத்தின் பின்வரும் இலாப நட்ட அறிக்கையிலிருந்து

1. மொத்த இலாப விகிதம் 2. நிகர இலாப விகிதம் கணக்கிடவும்.

**டெரிக்ஸ்டன் நிறுமத்தின் இலாப நட்ட அறிக்கை**

| விவரம் | ரூ. |
|---|---|
| 1.விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் | 24,00,000 |
| 2.இதர வருமானம்: | |
| முதலீடுகளிலிருந்து பெற்ற வருமானம் | 70,000 |
| 3.மொத்த வருவாய் (1+2) | **24,70,000** |
| 4.செலவுகள்: | |
| கொள்முதல் செய்த சரக்குகள் | 18,80,000 |
| சரக்கிருப்பு மாற்றம் | (-)80,000 |
| பணியாளர் நலன்களுக்கான செலவுகள் | 2,90,000 |
| இதர செலவுகள் | 1,10,000 |
| வரி ஒதுக்கு | 30,000 |
| மொத்த செலவுகள் | 22,30,000 |
| **5.அவ்வாண்டின் இலாபம்** | **2,40,000** |



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க** **7X5=35**

41. அ)நிமல்குமரன் என்பவர் தன்னுடைய ஏடுகளை இரட்டைப்பதிவு முறையில் பராமரிப்பதில்லை. 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

| விவரம் | 1-1-2018 ரூ. | 31.12.2018 ரூ. |
|---|---|---|
| இயந்திரம் | 60,000 | 60,000 |
| வங்கி ரொக்கம் | 25,000 | 33,000 |
| பற்பல கடனாளிகள் | 90,000 | 1,38,000 |
| சரக்கிருப்பு | 45,000 | 22,000 |
| பற்பல கடனீந்தோர் | 70,000 | 66,000 |

**கூடுதல் தகவல்கள்:**

| | | | |
|---|---|---|---|
| ரொக்க விற்பனை | 20,000 | கடன் விற்பனை | 1,80,000 |
| ரொக்கக் கொள்முதல் | 8,000 | கடன் கொள்முதல் | 52,000 |
| கூலி | 6,000 | சம்பளம் | 23,500 |
| விளம்பரம் | 7,000 | வங்கிக் கடன் மீது வட்டி | 4,500 |
| எடுப்புகள் | 60,000 | கூடுதல் முதல் | 21,000 |

**(அல்லது)**

ஆ) ஒரு கூட்டாண்மை நிறுவனத்தில் கண்ணன், ரஹிம் மற்றும் ஜான் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 5:3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2017, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | | கட்டடம் | 90,000 |
| கண்ணன் | 1,00,000 | | இயந்திரம் | 60,000 |
| ரஹிம் | 80.000 | | கடனாளிகள் | 30,000 |
| ஜான் | 40,000 | 2,20,000 | சரக்கிருப்பு | 20,000 |
| தொழிலாளர் ஈட்டு நிதி | | 30,000 | வங்கி ரொக்கம் | 50,000 |
| கடனீந்தோர் | | 20,000 | இலாப நட்டக் க/கு(நட்டம்) | 20,000 |
| | | 2,70,000 | | 2,70,000 |

ஜான் 2018, ஜனவரி 1 அன்று பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு கூட்டாண்மையிலிருந்து விலகினார்.

1. கட்டடத்தின் மீது 10% மதிப்பேற்றம் செய்யப்பட்டது.
2. சரக்கிருப்பு மதிப்பு 5% குறைக்க வேண்டும்.
3. ரூ.1,000 வாராக்கடன் ஒதுக்கு உருவாக்க வேண்டும்.
4. பதிவுறா பொறுப்பு ரூ.8,000 என கண்டறியப்பட்டது.
5. விலகும் கூட்டாளிக்குரிய தொகை உடனடியாகச் செலுத்தப்பட்டது.

மறுமதிப்பீட்டுக் கணக்கு, கூட்டாளிகள் முதல் கணக்கு மற்றும் விலகலுக்குப் பின் நிறுவனத்தின் இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

42. அ) ஜேம்ஸ் நிறுமத்தின் பின்வரும் 31.03.2019 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பிலிருந்து கீழ்க்காணும் விகிதங்களைக் கணக்கிடவும்.

1) புற அக பொறுப்புகள் விகிதம் 2) உரிமையாளர் விகிதம் 3) முதல் உந்துதிறன் விகிதம்

| விவரம் | ரூ. |
|---|---|
| **அ. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | |
| **1.பங்குதாரர் நிதி** | |
| அ) பங்கு முதல் | |
| நேர்மைப்பங்கு முதல் | 2,50,000 |
| 6% முன்னுரிமைப்பங்கு முதல் | 2,00,000 |
| ஆ) காப்புகள் மற்றும் மிகுதி | 1,50,000 |
| **2.நீண்டகாலப் பொறுப்புகள்** | |
| நீண்டகாலக் கடன்கள் (8% கடனீட்டு பத்திரங்கள்) | 3,00,000 |
| **3.நடப்புப் பொறுப்புகள்** | |
| வங்கியிலிருந்து பெற்ற குறுகியகாலக் கடன்கள் | 2,00,000 |
| கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் | 1,00,000 |
| **மொத்தம்** | **12,00,000** |
| **ஆ. சொத்துகள்** | |
| **1.நீண்டகாலச் சொத்துகள்** | |
| நிலைச் சொத்துகள் | 8,00,000 |
| **2.நடப்புச் சொத்துகள்** | |
| அ) சரக்கிருப்பு | 1,20,000 |
| ஆ) கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகள் | 2,65,000 |
| இ) ரொக்கத்திற்குச் சமமானவைகள் | 10,000 |
| ஈ) இதர நடப்புச் சொத்துகள்<br>முன்கூட்டி செலுத்திய செலவுகள் | 5,000 |
| **மொத்தம்** | **12,00,000** |

(அல்லது)

ஆ) இராமநாதபுரம் கிரிக்கெட் மன்றத்தின் பின்வரும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு மற்றும் கூடுதல் தகவல்களிலிருந்து 2018 டிசம்பர் 31-ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான வருவாய் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு தயார் செய்யவும்.

2018 டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையம் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு

| பெறுதல்கள் | ரூ | ரூ | செலுத்தல்கள் | ரூ |
|---|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | | வாடகை | 11,000 |
| கைரொக்கம் | | 5,000 | பொழுதுபோக்குச் செலவுஅறைகலன் | 11,200 |
| வங்கி ரொக்கம் | | 10,000 | விளையாட்டுப் பொருள்கள் வாங்கியது | 10,000 |
| சந்தா 2017 | 12,000 | | விளையாட்டு போட்டி செலவுகள் | 13,000 |
| 2018 | 33,000 | | முதலீடுகள் செய்தது | 12,000 |
| 2019 | 16,000 | 61,000 | இருப்பு கீ/இ -----கைரொக்கம் | 28,000 |
| நுழைவுக் கட்டணம் | | 6,000 | வங்கி ரொக்கம் | 1,300 |
| பொது நன்கொடைகள் | | 7,000 | | 4,000 |
| பழைய விழையாட்டுப் பொருள்கள் விற்றது | | 1,000 | | |
| இதர வரவுகள் | | 500 | | |
| | | 90,500 | | 90,500 |

கூடுதல் தகவல்கள்:

1) 2018 ஜனவரி 1 அன்று முதல் நிதி ரூ 30,000

2) விளையாட்டுப் பொருட்களின் தொடக்க இருப்பு ரூ 3,000, மற்றும் விளையாடடுப் பொருட்களின் இறுதி இருப்பு ரூ5,000



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

43. அ) அருண் மற்றும் செல்வம் என்ற கூட்டாளிகள் தங்கள் முதல் கணக்குகளை நிலைமுதல் முறையில் பராமரித்து வருகின்றனர். பின்வரும் விவரங்களைக் கொண்டு கூட்டாளிகளின் முதல் கணக்குகளைத் தயாரிக்கவும்.

| விவரம் | அருண் ரூ. | செல்வம் ரூ. |
|---|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று முதல் | 2,30,000 | 1,60,000 |
| 2018, ஜனவரி 1 அன்று நடப்புக் கணக்கு | 4,250(ப) | 10,000(வ) |
| அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | - | 70,000 |
| சொந்த பயனுக்காக எடுத்தது | 10,000 | 20,000 |
| எடுப்புகள் மீது வட்டி | 750 | 600 |
| 2018 ஆம் ஆண்டிற்கான இலாபப் பங்கு | 22,000 | 15,000 |
| முதல் மீது வட்டி | 1,100 | 750 |
| கழிவு | 6,800 | - |
| ஊதியம் | - | 6,850 |

(அல்லது)

ஆ) மொத்தக் கடனாளிகள் கணக்கு, மொத்தக் கடனீந்தோர் கணக்கு, பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு மற்றும் செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு மாதிரிபடிவம் தருக.

44. அ) பின்வரும் தகவல்களிலிருந்து உயர் இலாபத்தினை மூலதனமாக்கல் முறையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

1. சாதாரண இலாப விகிதம்10%
2. கடந்த 4 ஆண்டுகளின் இலாபங்கள் ரூ.30,000,ரூ.40,000,ரூ.50,000 மற்றும் ரூ.45,000.
3. மேற்குறிப்பிட்ட இலாபம் ரூ.30,000ல் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ரூ.3,000 சேர்ந்துள்ளது.
4. சராசரி பயன்படுத்தப்பட்ட முதல் ரூ.3,00,000.

(அல்லது)

ஆ) அண்ணாமலை நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து 1. சரக்கிருப்பு சுழற்சி விகிதம் 2. கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகளின் சுழற்சி விகிதம் 3. கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் சுழற்சி விகிதம் மற்றும் 4. நிலைச் சொத்துகள் சுழற்சி விகிதம் கணக்கிடவும்.

| விவரம் | 2018, மார்ச் 31 ரூ. | 2019, மார்ச் 31 ரூ. |
|---|---|---|
| சரக்கிருப்பு | 3,60,000 | 4,40,000 |
| கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகள் | 7,40,000 | 6,60,000 |
| கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் | 1,90,000 | 2,30,000 |
| நிலைச் சொத்துகள் | 6,00,000 | 8,00,000 |

**கூடுதல் தகவல்கள்:**

1. அவ்வாண்டில் விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் ரூ.35,00,000
2. அவ்வாண்டில் கொள்முதல் ரூ.21,00,000
3. விற்பனையிலிருந்து பெற்ற வருவாய்க்கான அடக்கவிலை ரூ.16,00,000.
4. விற்பனை மற்றும் கொள்முதல் கடன் விற்பனை மற்றும் கடன் கொள்முதல் எனக் கொள்ளவும்.

45. அ) இலாப நட்டங்களை சமமாகப் பகிர்ந்து கொள்ளும் ஜேம்ஸ் மற்றும் ஜஸ்டினாவின் 1.1.2017ம் நாளன்றைய இருப்பு நிலைக்குறிப்பு பின்வருமாறு:

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|---|
| முதல் க/கு: | | | கட்டடம் | 70,000 |
| ஜேம்ஸ் | 40,000 | | சரக்கிருப்பு | 30,000 |
| ஜஸ்டினா | 50,000 | 90,000 | கடனாளிகள் | 20,000 |
| கடனீந்தோர் | | 35,000 | வங்கி ரொக்கம் | 15,000 |
| காப்பு நிதி | | 15,000 | முன்கூட்டிச் செலுத்திய காப்பீடு | 5,000 |
| | | 1,40,000 | | 1,40,000 |



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

மேற்கூறிய நாளில் பாலன் என்பவரை எதிர்கால இலாபத்தில் 1/5 பங்கிற்கு பின்வரும் விவரங்கள் அடிப்படையில் கூட்டாளியாக சேர்த்தனர்.

1. பாலன் ரூ.25,000 முதல் கொண்டுவந்தார்.
2. நற்பெயரில் அவருடைய பங்காக ரூ.10,000 ரொக்கமாக கொண்டுவந்தார்.
3. சொத்துகள் கீழ்க்கண்டவாறு மதிப்பிடப்பட்டன:
   கட்டடம் ரூ.80,000, கடனாளிகள் ரூ.18,000, சரக்கிருப்பு ரூ.33,000.

தேவையான பேரேட்டுக் கணக்குகளை தயார் செய்து கூட்டாளி சேர்ப்பிற்கு பின்வரும் இருப்புநிலைக் குறிப்பினைத் தயார் செய்யவும்.

(அல்லது)

ஆ) குமார் நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து போக்கு சதவிகிதங்களைக் கணக்கிடவும்.

| விவரம் | (ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|
| | 2015-16 | 2016-17 | 2017-18 |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 300 | 270 | 150 |
| இதர வருமானம் | 50 | 80 | 60 |
| செலவுகள் | 250 | 200 | 125 |
| வருமான வரி % | 40 | 40 | 40 |

46. அ) வர்ஷா, சாந்தி மற்றும் மாதுரி என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை முறையே 5:4:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர்.

2017, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | | வளாகம் | 1,20,000 |
| வர்ஷா | 80,000 | | சரக்கிருப்பு | 40,000 |
| சாந்தி | 60,000 | | கடனாளிகள் | 50,000 |
| மாதுரி | 20,000 | 1,60,000 | வங்கி ரொக்கம் | 18,000 |
| பொதுக்காப்பு | | 48,000 | இலாப நட்டக் க/கு (நட்டம்) | 12,000 |
| பற்பல கடனீந்தோர் | | 32,000 | | |
| | | 2,40,000 | | 2,40,000 |

1.1.2018 அன்று மாதுரி இறந்து விட்டார். அவரின் இறப்பின் போது பின்வரும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

1. சரக்கிருப்பின் மதிப்பில் ரூ.5,000 குறைக்கப்பட வேண்டும்.
2. வளாகம் மீது 20% மதிப்பேற்றம் செய்யப்பட வேண்டும்.
3. வாராக்கடன் ஒதுக்கு ரூ.4,000 உருவாக்க வேண்டும்.
4. மாதுரிக்குச் செலுத்த வேண்டியத் தொகை இன்னும் செலுத்தப்படவில்லை.

கூட்டாளியின் இறப்பிற்கு பின் நிறுவனத்தின் மறுமதிப்பீட்டுக் கணக்கு, கூட்டாளிகள் முதல் கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

(அல்லது)

ஆ) பெறுதல் செலுத்தல் கணக்கிற்கும், வருவாய் செலவு கணக்கிற்கும் உள்ள வேறுபாடுகளை தரவும்.

47. அ) கணக்கியல் அறிக்கை என்றால் என்ன? ஏதேனும் 5 கணக்கியல் அறிக்கைகளை கூறுக.

(அல்லது)

ஆ)யுனைடட் இண்டஸ்ட்ரிஸ் வரையறு நிறுமம் ரூ.10 மதிப்பிலான பங்குகளை 10 % முனைமத்தில் வெளியிட்டது. விண்ணப்பத்தின் மீது ரூ.3, ஒதுக்கீட்டின் மீது (முனைமம் உள்பட) ரூ. 4, முதலாவது அழைப்பின் மீது ரூ.2 மற்றும் இறுதி அழைப்பின் மீது ரூ.2 என தொகை செலுத்தப்பட வேண்டும். பின்வரும் நடவடிக்கைகளின் சூழ்நிலைகளுக்கேற்ப ஒறுப்பிழப்பு குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

1. 200 பங்குகள் வைத்துள்ள மனோஜ் இரண்டாவது மற்றும் இறுதி அழைப்பினை செலுத்தத் தவறியதால், அவருடைய பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன.
2. 200 பங்குகள் வைத்துள்ள மனோஜ் ஒதுக்கீட்டு, முதலாவது மற்றும் இறுதி அழைப்பினை செலுத்தத் தவறியதால், அவருடைய பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன.
3. 200 பங்குகள் வைத்துள்ள மனோஜ் ஒதுக்கீடு மற்றும் முதலாவது அழைப்பினை செலுத்தத் தவறியதால் முதலாவது அழைப்பிற்கு பின் அவரது பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com